
## திராவிடத்தால் வாழ்கிறோம்

917

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்





-வாழ்வோம்

## உடன்பிறப்பே

**நீரை.மகேந்திரன்**

121



ஓவியம் : ரவி பேலட்

# துரை.கிருஷ்ணமூர்த்தி
# களப்பணியில் கழக மருத்துவர்!

**தி.மு.கழக வரலாற்றில் இடம் பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த துரை.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் வரலாற்றினைப் பார்க்கலாம்.**

“தி.மு.கழகத் தொண்டனின் கட்சிப்பணி என்பது, எந்த நேரமும், எந்த இடத்திலும் பணியாற்றும் சமூகப் பணியாக இருக்கும்” என சீரணி அமைப்பின் உருவாக்கத்தின்போது குறிப்பிடுகிறார், பேரறிஞர் அண்ணா. அந்த வகையில், கழகத்தினர் பலரும் தங்களின் வீட்டையே கட்சி அலுவலகமாக்கி இருக்கின்றனர். அந்த வரிசையில், சிதம்பரம் நகரில் தனது மருத்துவமனையிலேயே கட்சிப்பணிக்காக நேரம் ஒதுக்கியதுடன், வெளியூரிலிருந்து கழகப் பணிக்காக வரும் கட்சியினர் மருத்துவமனையையே வீடாக்கிக் கொள்ளும் அளவுக்கு மக்கள் சேவை புரிந்த மருத்துவர் துரை.கிருஷ்ணமூர்த்தி, சிதம்பரம்-பரங்கிப்பேட்டை மக்கள் மத்தியில் மக்கள் மருத்துவராக வலம் வந்தவர்.

சிதம்பரம்-பரங்கிப்பேட்டை அடுத்த ஆதிராகவநல்லூர் கிராமத்தைச் சேர்ந்தவர் துரை கலியமூர்த்தி. கடலூர், சிதம்பரம் கழக முன்னோடிகளுடன் இணைந்து கழகப் பணியில் ஈடுபட்டவர். இளவழுதி, தில்லை வில்லாளன், எம்.ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோருடன் இணைந்து அப்பகுதியில் கழக வளர்ச்சிக்குப் பாடுபட்டவர். பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளராக இளம் வயதிலேயே பொறுப்புக்கு வந்தார். 1963-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது இளைஞராக மிகத் தீவிரமாக ஈடுபட்டவர். அவரது உடன்பிறந்த அண்ணன் கிருஷ்ணமூர்த்தி.

### மருத்துவச் சேவையும் கழகப் பணியும்

பரங்கிப்பேட்டையில் தொடக்கக் கல்வி முடித்துவிட்டு, சென்னை எம்.எம்.சி. மருத்துக் கல்லூரியில் மருத்துவம் முடித்து, அரசு மருத்துவராகப் பணிக்குச் சேர்ந்தார். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே திராவிடக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டவர், அரசுப் பணிக்குப் பின்னர், தம்பியின் வழியைப் பின்பற்றி, கழக அரசியலில் இணைந்து செயல்படத் தொடங்கினார். கடலூர்-ஸ்ரீமுஷ்ணம் ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனையில் மக்களுக்குச் சேவையாற்றிக் கொண்டே, அரசியல் பணிகளில் ஈடுபடுவார்.

1970-ஆம் ஆண்டுவாக்கில், துரை. கலியமூர்த்தி அவர்கள், பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் இருந்து சிதம்பரம் நகரக் கழக அரசியலில் ஈடுபட, குடும்பம் மொத்தமும் சிதம்பரத்துக்கு இடம் பெயர்ந்தது. அதே நேரத்தில் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சிதம்பரத்தில் மருத்துவத் தொழிலில் மக்கள் மத்தியில் பெயர் எடுக்கத் தொடங்கி, தனியாக சிறிய அளவில் மருத்துவமனை அமைத்து செயல்படத் தொடங்கினார். மருத்துவமனைக்கு வரும் நோயாளிகளில் பெரும்பாலானவர்கள் சுற்றுவட்டார கிராமப்புற நோயாளிகள் என்பதால், அவர்களிடம் சிகிச்சைக்கான கட்டணத்தைக்கூட வாங்காமல் அனுப்பி வைப்பார் என்பதால், மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றவராக விளங்கினார். அந்த நன்மதிப்பு முத்தமிழறிஞர் வரை சென்று, அவரைப் பாராட்ட வைத்துள்ளது. 1977-ஆம் ஆண்டு தேர்தலின்போது, துரை.கலியமூர்த்தியை, சிதம்பரம் தொகுதியில் போட்டியிட வைத்தார் கலைஞர். தேர்தல் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு, கழகத்தின் வெற்றியினை உறுதி செய்தனர், சகோதரர்கள் இருவரும். மிசா நெருக்கடிகளைக் கடந்த வெற்றியாக இது கவனிக்கப்பட்டது.

### 13 ஆண்டு காலம்

மிசா அடக்குமுறை காலத்தின்போதும், அதன்பின்னர் கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் சிதம்பரம் பகுதிக் கழகத்தில் பலரும் கழகத்தின் செயல்பாடுகள் அவ்வளவு தான் என்றனர். ஏனென்றால், அங்கு கழகத்தின் வலிமையான நிர்வாகியாக இருந்த வி.வி.சாமிநாதன் போன்றோர் எதிரணிக்குச் சென்றிருந்தனர். அப்படிப்பட்ட காலத்தில், துரை.கிருஷ்ணமூர்த்தி போன்றோர் கலைஞருக்கும் கழகத்துக்கும் தூணாக நின்றனர். சிதம்பரத்தில் அவரது மருத்துவமனையே அறிவிக்கப்படாத கழக அலுவலகம் போல செயல்பட்டு வந்தது.

1984-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலின் போது, முத்தமிழறிஞர் கலைஞர், புவனகிரி தொகுதியில் போட்டியிட துரை.கிருஷ்ணமூர்த்திக்கு வாய்ப்பளித்தார். ஆனால், அப்போதிருந்த அலையின் காரணமாக, வெற்றிவாய்ப்பை இழந்தார் கிருஷ்ணமூர்த்தி. என்றாலும், புவனகிரி தொகுதியில் கட்சிக் களப்பணியில் ஈடுபட்டு வந்த அவருக்கு, 1989-ஆம் ஆண்டில், சிதம்பரம் தொகுதியில் மீண்டும் வேட்பாளராகும் வாய்ப்பை அளித்தார் கலைஞர். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில், கழகத்தின் வெற்றியினைப் பதிவு செய்தார் கிருஷ்ணமூர்த்தி.

அதற்கு காரணம், 1985-ஆம் ஆண்டு காலகட்டத்தில் அப்பகுதி மக்களிடம் வீடு வீடாகச் சென்று, சமூகநீதி அரசியலின் தேவையை, அதில் கழகம் கொண்டிருக்கும் உறுதியைப் பேசிவந்தார். குறிப்பாக, தி.மு. கழகத்தில் இருந்து ‘மருத்துவர்’ ஒருவரே நேரடியாக களத்துக்கு வருவது, மக்களுக்கு நம்பிக்கை அளித்தது.

### இரட்டைக் குழல் துப்பாக்கி போல

“துரை.கிருஷ்ணமூர்த்தி அவர்களும், துரை.கலியமூர்த்தி அவர்களும் ஒரே குடும்பத்தில் இருந்து ‘இரட்டைக் குழல் துப்பாக்கி’ போல கழகப் பணியில் செயல்பட்டவர்கள். அதில் ஒருவர் சமூக மருத்துவராக இருக்கிறார்” என துரை.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இல்ல மணவிழா நிகழ்ச்சியில் குறிப்பிட்டுள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர்.

துரை.கலியமூர்த்தி அவர்கள், ஆதிராகவநல்லூர் கிளைச் செயலாளர், பரங்கிப்பேட்டை ஒன்றியச் செயலாளர், சிதம்பரம் நகரச் செயலாளர், மாவட்டப் பொருளாளர் என கழகப் பணியில் படிப்படியாக வளர்ந்து வந்தவர். அதே வேகத்தில் அவரது சகோதரரான கிருஷ்ணமூர்த்தி மருத்துவராகச் செயல்பட்டுக் கொண்டே, தலைமைச் செயற்குழு உறுப்பினர், தணிக்கைக் குழு உறுப்பினர், தீர்மானக் குழு உறுப்பினர் என கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்டார்.

### உருவச்சிலை

இளைஞர்களை வழிநடத்துவது, அரசியல் பயிற்றுவிப்பது ஆகியவற்றிலும் சிறப்பாகச் செயல்பட்டவர் கிருஷ்ணமூர்த்தி. ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக வளர்ந்து வந்த இன்றைய அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உள்பட அன்றைய இளைஞர்கள் பலரும் கிருஷ்ணமூர்த்தி அவர்களுடன் பயணம் செய்தவர்கள் என்கின்றனர் மாவட்டக் கழகத்தினர்.

மருத்துவராக இருந்தாலும், கழகத்தின் அத்தனை போராட்டங்களிலும் தவறாமல் கலந்து கொண்டவர் கிருஷ்ணமூர்த்தி. தவிர, கழகத்தின் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றில் தடியடித் தாக்குதல்கள் நடந்தால், மருத்துவ உதவிக்கு, கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மருத்துவமனைக்குத்தான் செல்வார்கள் கழகத்தினர் எனக் குறிப்பிடுகின்றனர்.

தொடர்ச்சியாக கழகப் பணியில் சிறப்பாக செயல்பட்டு வந்தவர், உடல்நலன் பாதிக்கப்பட்டு, 1999-ஆம் ஆண்டு நவம்பர் 16-ஆம் தேதி எதிர்பாராத விதமாக இயற்கை எய்தினார்.

அவர் மறைந்து 25 ஆண்டுகள் கடந்த பின்னும், சிதம்பரம், பரங்கிப்பேட்டை, புவனகிரி பகுதிக் கழகத்தினர் தவறாமல் அவரது நினைவுநாள் நினைவேந்தலைக் கடைபிடிக்கின்றனர். 2020-ஆம் ஆண்டு, கழக நிகழ்ச்சிகளுக்காக சிதம்பரம் சென்றிருந்த இளைஞர் அணிச் செயலாளர் அவர்கள், துரை.கிருஷ்ணமூர்த்தி அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து மரியாதை செய்தார். இரத்தம் சிந்தி கழகம் வளர்த்த முன்னோடிகளை காலத்தால் மறைக்க முடியாது என்பதும், கழகம் மறக்காது என்பதும் இன்றைக்கு எழுதப்படும் வரலாற்றின் மூலம், மீண்டும் உயிர்பெறும் என்பது உண்மை.

**...துடிக்கும்**

> **“கழகத்தின் போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள் ஆகியவற்றில் தடியடித் தாக்குதல்கள் நடந்தால், மருத்துவ உதவிக்கு, கிருஷ்ணமூர்த்தி அவர்களின் மருத்துவமனைக்குத்தான் செல்வார்கள் கழகத்தினர் எனக் குறிப்பிடுகின்றனர்.”**

## என்ன செய்கிறது, என்.ஐ.ஏ.?

மகாராஷ்டிரா மாநிலம் மாலேகானில், 2008-ஆம் ஆண்டு மசூதி அருகே நடந்த குண்டு வெடிப்பில், 6 பேர் உயிரிழந்தனர், நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். பா.ஜ.க. முன்னாள் எம்.பி. பிரக்யா சிங் தாக்கூர், லெப்டினன்ட் கர்னல் பிரசாத் புரோஹித், ராஜா ரஹீர்கர், சாமி அம்ருதானந்த், சுதாகர் சதுர்வேதி உள்ளிட்ட ஏழு பேர் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது விசாரணை நடைபெற்று வந்தது. குண்டுவெடிப்பில் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிள் பா.ஜ.க. முன்னாள் எம்.பி பிரக்யா சிங் தாக்கூர் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

தேசிய புலனாய்வு முகமை விசாரித்த இந்த வழக்கில், 17 ஆண்டுகளுக்குப் பிறகு, குற்றஞ்சாட்டப்பட்ட ஏழு பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டுகளுக்கு உரிய ஆதாரத்தை வழங்க தேசிய புலனாய்வு முகமை தவறிவிட்டது எனக்கூறி, மும்பை சிறப்பு என்.ஐ.ஏ. நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்திருக்கிறது. திட்டமிட்டு, இந்த வழக்கை நீர்த்துப் போகச் செய்திருக்கிறது என்.ஐ.ஏ. என எதிர்க்கட்சிகள் விமர்சித்துள்ளன. ஏற்கெனவே, பில்கிஸ் பானு வழக்கில், தொடர்புடைய குற்றவாளிகளை, குஜராத் மாநில பா.ஜ.க. அரசு நன்னடத்தை விதிகளைக் காரணம்காட்டி, விடுதலை செய்தது. அதன்பிறகு, உச்சநீதிமன்றம் தலையிட்டு, அவர்களின் விடுதலையை ரத்து செய்தது.


அதேபோல, நாட்டை உலுக்கிய பத்திரிகையாளர் கௌரி லங்கேஷ் கொலை வழக்கில், குற்றம்சாட்டப்பட்ட 18 பேரில் 16 பேர் ஜாமினில் வந்துவிட்டனர். இவர்களில் சமூக செயற்பாட்டாளர் கல்புர்கி கொலை வழக்கில், தொடர்புடையவர்களும் உள்ளனர். ஜாமினில் வந்தபோது இவர்களில் சிலருக்கு, இந்துத்துவா அமைப்புகள் சார்பாக பட்டாசு வெடித்து, மாலை சூட்டி, ‘இந்துப் புலிகள்’ என போஸ்டர் ஒட்டி வரவேற்ற கூத்துகளும் நடந்தன. எனவே மாலேகான் குண்டு வெடிப்பில் விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பாராட்டு விழா நடத்தினாலும், அதில் ஆச்சர்யம் இருக்காது.

2018-2022 வரையிலான காலகட்டத்தில் மட்டும் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தில் (UAPA) 6,500 பேருக்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆனால், வெறும் 252 பேர் மட்டுமே தண்டிக்கப்பட்டுள்ளனர். இரண்டே வழக்குகள் மட்டும்தான் இதுவரை தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றன. இவர்களில் பெரும்பாலானவர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் என்பதையும் இத்துடன் சேர்த்துப் பார்க்க வேண்டியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### பேரறிஞர் அண்ணாவுடன் என் தந்தை!



சி.பூங்கோதை

எனது தந்தையார் ஈரோடு எம்.சின்னப்பன் அவர்கள் கழக முன்னோடி. பேரறிஞர் அண்ணா, கலைஞர் என கழகத் தலைவர்கள் பலருடனும் நெருங்கிப் பழகியவர். ஈரோட்டில் தந்தை பெரியார் பட்டறையில் எல்லோருடனும் நெருங்கிப் பயணித்தவர். அன்றைய ஈரோடு நகர்மன்ற 22-வது வார்டு உறுப்பினராக 1952-ஆம் ஆண்டு முதல் 1957-ஆம் ஆண்டுவரை 17 ஆண்டுகள் செயல்பட்டவர். இந்தப் படம் 1954 -ஆம் ஆண்டு அப்பாவின் சுயமரியாதைத் திருமணத்தை, பேரறிஞர் அண்ணா, ஈ.வெ.கி.சம்பத் ஆகியோர் நடத்தி வைத்தபோது எடுத்தது.

**- சி.பூங்கோதை, கள்ளுக்கடைமேடு, ஈரோடு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அழகிரி மாளிகை!

1951-ஆம் ஆண்டு திருவாரூரில், ‘அழகிரி மாளிகை’ என கழகத்துக்குக் கட்டடம் கட்ட விரும்பினார் கலைஞர். அதற்காக மாவட்டம் எங்கும் நன்கொடை திரட்டினார். நிதி திரட்டும் நிகழ்ச்சியாக, ஜனவரி 07-ஆம் தேதி கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் ‘கிந்தனார்’ கதா காலட்சேபம் நடைபெற்றது.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131